# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, மே மாதம் 04 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 6.25** **தபாற் செலவு: ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூரதிகார சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம்

[2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 10/2007

## உள்ளூரதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, உள்ளூரதிகாரசபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*262 ஆம் அத்தியாயத்தின் 65அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**2.** உள்ளூரதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ என்னும் பிரிவு இத்தால் திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கு அவ்வுட்பிரிவின் (2)(அ) என்னும் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட (2)(அ) என்னும் உட்பிரிவில் "அத்தகைய நியமனப்பத்திரத்தில், எவ்வேட்பாளர்களின் பெயர்கள்" என்னும் சொற்கள் முதல் அவ்வுட்பிரிவின் இறுதி வரையிலான எல்லாச் சொற்களையும் அதினின்று விட்டுவிடுவதன் மூலமும் ; அத்துடன்

(3) மீள இலக்கமிடப்பட்ட 2(அ) என்னும் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் ;

"(ஆ) தேர்தல் இடப்பரப்பொன்று தொடர்பில் ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியால் அல்லது சுயேச்சைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரத்தில், எந்த வேட்பாளர்களின் பெயர்கள் இருந்தனவோ அந்த எல்லா வேட்பாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது எந்த வேட்பாளர்களின் பெயர்கள் அத்தகைய நியமனப்பத்திரத்தில் எஞ்சியிருக்கின்றனவோ அந்த வேட்பாளர்கள் எவரும் எவையேனும் முந்துரிமைகளைப் பெறாதுள்ளவிடத்து ; அத்துடன்

அதனால் இயைபான உள்ளூரதிகாரசபையின் வெற்றிடமொன்று எழுமிடத்தும் தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய நிகழ்வைப் பற்றி பதவியை வறிதாக்கிய உறுப்பினரின் நியமனப் பத்திரத்தைச் சமர்ப்பித்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேச்சைக் குழுவின் குழுத் தலைவருக்கு வெற்றிடத்தை நிரப்புதல் தொடர்பிலான அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதிக்குள் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்காக உள்ளூரதிகாரசபையொன்றின் உறுப்பினரொருவராக இருப்பதற்கு கட்டளைச் சட்டத்தின்கீழ் தகைமையுள்ள ஆளொருவரைப் பெயர்குறித்து நியமிக்குமாறு அவரைத் தேவைப் படுத்தி அறிவித்தல் வேண்டும். அத்தகைய செயலாளர் அல்லது குழுத்தலைவர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகைமையுள்ள ஆளொருவரை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பெயர்குறித்து நியமிப்பாராயின் அத்துடன் அத்தகைய வெற்றிடத்தை நியமிப்பதற்கென பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளினால் அரசியமைப்பிற்கான ஏழாவது அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் விடயத்திற்கேற்ப உறுதியுரையை மொழிந்து கீழொப்பமிட்டு அல்லது சத்தியத்தைச் செய்து கீழொப்பமிட்டு விடயத்துக்கேற்ப சத்தியமொன்றுடன் அல்லது உறுதியுரையொன்றுடன் அத்தகைய பெயர்குறித்த நியமனம் சேர்த்தனுப்பப்படுமாயின், தெரிவத்தாட்சி அலுவலர் அத்தகைய ஆள் இயைபான உள்ளூரதிகாரசபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக வெளிப்படுத்துதல் வேண்டும்.

(இ) இயைபான உள்ளூரதிகாரசபையில் ஏற்படுகின்ற வெற்றிடத்தை நிரப்புவதற்கு (ஆ) எனும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட விதமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள், எவ்வுறுப்பினரை அடுத்துப் பின்னுறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் முடிவுறாது

எஞ்சியுள்ள பதவிக்காலத்துக்கு மட்டுமே பதவி தாங்குதல் வேண்டும்.".

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*